# அன்ஸாரி (ஸஹாபிகள்)

அண்ணல் நா யகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அழகிய வரலாற்றைப் படித்தோர் மட்டுமே அன்ஸாரித் தோழர்களின் (ஆதரவாளர்கள்)அருமை பெருமைகளை அறிவர். அவர்கள் தான் இஸ்லாமிய வளர்ச்சிக்கும் அதன் ஆட்சிக்கும் மாட்சிக்கும் வித்திட்டவர்கள்.

அவர்கள் தோள்கொடுத்த தீரமும் தியாகமும் வாரி வழங்கிய உதவி ஒத்தாசைகளும் மறக்கமுடியாதவை. வரலாறே வியந்து நிற்கிறது. அவர்கள் காட்டிய சகோதர வாஞ்சையை உலகம் இன்றளவும் கண்டதில்லை.

நாடே ஒதிக்கியபோது மக்கத்து மக்களின் கண்களில் மண்ணை தூவிவிட்டு மிகத்துணிச்சலோடு மினா அகபாவில் ஹிஜ்ரி 11-ல் ஆறு பேர் கொண்ட குழுவும் , அடுத்த ஆண்டு நள்ளிரவு வேளையில் ஹிஜ்ரி 12-ல் அந்த ஆறில் 5 பேரும் மேலும் 7 பேருமாக 12 பேர்களும்,அதையடுத்த ஆண்டு ஹிஜ்ரி 13-ல் 75 பேருமாக 'பெருமானாரையும், அவருடன் வரு வோரையும், எதிரிகளிடமிருந்து காத்து அவர எது சத்திய மார்க்கத்துக்கு புது வேகத்தை கொடுத்து தோள் கொடுத்து உதவுவோம்' என வீர சபதம் செய்த அந்த ஒப்பந்தத்தை மறக்கமுடியுமா?

அவர்களில் வீர சபதம் செய்த உலகே வியக்கும் வீராங்கனைகளான உம்மு உமாரா-நுஸைபா பின்த் கஅப் , உம்மு மனீஃ- அஸ்மா பின்த் அம்ர் ஆகிய இரு தியாகச் செமம்லகளை மறக்கமுடியுமா?

அகதிகளையும் ஆதரவாளர்களையும் சகோதரர்களாக பின்னிப் பிணைத்தபோது தங்களின் வீடு வாசல்களையும், சொத்து சுகங்களையும் சமமாகப்பங்கிட்டுக் கொடுத்த அந்த தியாக வரலாற்றை மறக்கமுடியுமா ?

தோட்டத்தொழிலில் அகதிகளுக்குப் பயிற்சியில்லாததால் ஆதரவாளர்களே முழுவேலை யும் செய்து பலனில் பாதியை அகதிகளுக்கு வழங்கினார்களே அந்த மாபெரும் தியாகத்தை மறக்க முடியுமா?

இன்னும் ஒரு படி மேலே சென்று , ஸஅத் இப்னு ராஃபி ரலியல்லாஹு அன்ஹு என்னும் ஆதரவாளர் தமது இஸ்லாமிய சகோதரரான அப்துர்ரஹ்மான் இப்னு அவ்ஃ.பு ரலியல்லாஹு அன்ஹுக்கு தம் இரு மனைவியரில் ஒரு மனைவியை மணவிடுதலை செய்து மணமுடித்து வைக்க முன்வந்த வரலாறு காணாத அதிசயமிக்க தியாக வரலாற்றை மறக்க முடியுமா ?

அகபா உடன்படிக்கையின்படி மதீனாவிற்குள் அண்ணல் நா யகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பாது காப்பு வழங்குவதாகவே ஆதரவாளர்கள் உறுதி கூறியிருந்தனர். அவர்களை மதீனாவுக்கு வெளியே போருக்கு அழைத்துச் செல்வது பற்றி தயங்கிய நா யகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அதுபற்றி அவர்களுடன் ஆலோசனை கலந்தபொழுது,

தாங்கள் எங்களை பர்குல் கிமாதுக்கு அழைத்துச்செல்ல விரும்பினும் நாங்கள் வரத் தயார். 'நீங்களும் உங்களுடைய ஆண்டவனும் போய் போர் செய்யுங்கள். நாங்கள் இங்கே

வீற்றிருக்கிறோம்’ **(அல் குர்ஆன் 5:24)** என்று பனீ இஸ்ராயீல்கள் மூஸா (அலை ஹிஸ்ஸலாம்) அவர்களிடம் கூறியது போன்று நாங்கள் ஒருபோதும் கூறமாட்டோம் என்று கூறிய கனற்பொறி தெறிக்கும் அந்த வீர மொழி களை மறக்கத்தான் முடியுமா ?

உலக வரலாற்றில் மின்னிடும் அந்தத் தியாகச் செம்மல்கள் யார் யார் என்று பார்ப்போமா?

1. அஸ்அத் இப்னு ஸுராரா ரலியல்லாஹு அன்ஹு (நஜ்ஜார் குடும்பம்)
2. அவ்ஃப் இப்னு ஹாரித் ரலியல்லாஹு அன்ஹு (நஜ்ஜார் குடும்பம்)
3. ராஃபிஃ இப்னு மாலிக் ரலியல்லாஹு அன்ஹு (ஜுரைஜ் குடும்பம்)
4. குத்பா இப்னு ஆமிர் இப்னு ஹதீதா ரலியல்லாஹு அன்ஹு (ஸலமா குடும்பம்)
5. உக்பத் இப்னு ஆமிர் இப்னு நாஃபிஃ ரலியல்லாஹு அன்ஹு (ஹராம் இப்னு கஅப் குடும்பம்)
6. ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் இப்னு ரிஆப் ரலியல்லாஹு அன்ஹு (உபைத்இப்னு கன்ம் குடும்பம்)
7. முஆத் இப்னு ஹாரித் ரலியல்லாஹு அன்ஹு (நஜ்ஜார் குடும்பம்)
8. தக்வான் இப்னு அப்துல் கைஸ் ரலியல்லாஹு அன்ஹு (ஜுரைஜ் குடும்பம்)
9. உபாதத் இப்னு ஸாமித் ரலியல்லாஹு அன்ஹு (கன்ம் குடும்பம்)
10. யஸீத் இப்னு தஃலபா ரலியல்லாஹு அன்ஹு (கன்ம் குடும்ப நண்பர்;)
11. அப்பாஸ் இப்னு உபாதா இப்னு நள்லா ரலியல்லாஹு அன்ஹு (ஸாலிம்; குடும்பம்)
12. அபுல் ஹைதம் இப்னு தய்யிஹான் ரலியல்லாஹு அன்ஹு (அப்துல் அஷ;அல் குடும்பம்)
13. உவைம் இப்னு ஸாயிதா ரலியல்லாஹு அன்ஹு (அம்ர் இப்னு அவ்ஃப குடும்பம்)
14. உஸைத் இப்னு குளைர் ரலியல்லாஹு அன்ஹு
15. ஸஃது இப்னு முஆத் ரலியல்லாஹு அன்ஹு
16. கஅப் இப்னு மாலிக் ரலியல்லாஹு அன்ஹு
17. அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னு ஹராம் ரலியல்லாஹு அன்ஹு
18. அப்துல்லாஹ் இப்னு ஸலாம் ரலியல்லாஹு அன்ஹு
19. அனஸ் இப்னு மாலிக் ரலியல்லாஹு அன்ஹு
20. ஸஃது இப்னு உபாதா ரலியல்லாஹு அன்ஹு
21. அப்துல்லாஹ் இப்னு ரவாஹா ரலியல்லாஹு அன்ஹு

## 12 நகீப்கள் (தலைவர்கள்)

ஹி 13ல் கலந்து கொண்ட 75 பேரில் கஸ்ரஜ் கிளையைச் சேர்ந்த 9 பேரையும், அவ்ஸ் கிளையைச்சேர்ந்த 3 பேரையும் சேர்த்து 12 தலைவர்களை பிரச்சாரத்திற்காக நியமித்தார்கள். அவர்கள் வருமாறு:-

கஸ்ரஜ் கிளையைச் சேர்ந்த தலைவர்கள் (9பேர்)

1. அஸ்அத் இப்னு ஸுராரா இப்னு அதஸ் ரலியல்லாஹு அன்ஹு
2. ஸஃத் இப்னு ரஃபீஃ இப்னு அம்ர் ரலியல்லாஹு அன்ஹு
3. அப்துல்லாஹ் இப்னு ரவாஹா இப்னு தஃலபா ரலியல்லாஹு அன்ஹு
4. ராஃபிஃஇப்னு மாலிக் இப்னு அஜ்லான் ரலியல்லாஹு அன்ஹு
5. பராஃ இப்னு மஃரூர் இப்னு ஸகர் ரலியல்லாஹு அன்ஹு
6. அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னு ஹராம் ரலியல்லாஹு அன்ஹு
7. உபாதத் இப்னு ஸாமித் இப்னு கைஸ் ரலியல்லாஹு அன்ஹு
8. ஸஃத் இப்னு உபாதா இப்னு துலைம் ரலியல்லாஹு அன்ஹு
9. ஸஃத் இப்னு அம்ர் இப்னு குனைஸ் ரலியல்லாஹு அன்ஹு

## அவ்ஸ் கிளையைச்சேர்ந்த தலைவர்கள் (3பேர்)

1. உஸைத் இப்னு குளைர் இப்னு ஸிமாக் ரலியல்லாஹு அன்ஹு
2. ஸஃத் இப்னு கைஸமா இப்னு ஹாரித் ரலியல்லாஹு அன்ஹு
3. ரிஃபாஆ இப்னு அப்துல் முன்திர் இப்னு ஜுபைர் ரலியல்லாஹு அன்ஹு

www.bathusha.com
Tamil Islamic Online Radio 24h

**உண்மையும் நன்மையும் உன்னிலும் என்னிலும் உண்டாகட்டும்**

**AL ALIM S.A.M.SEYED JAHAN MOWLANA HUSAINY JALALIY**

**BATHUSHA.COM**